# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,824 — 1931 ம் ௵ தைமீ 16 ந் திகதி வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

காணி விற்பனவுகள்.—குப்

**Jaffna No. 31.—1931** ம் ஆண்டு பங்குனிமீ 6 ந் திகதி வெ உரித்த ம காலை ன்பது மணிக்கு நெடுந்தீவு கவுண்மேந்து வங்களாவில் வடமாகாணத்து கவுண்மேந்து ஏசன் டிக்குரியவுமிதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகள், அரசாட்சியாரால் காணி விற்பனைவைப்பசும், காலஞ்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறுதிஸ் பெறிரு விற்கப்படும்.

21 காணித் துண்டுகள், வட மாகாணத்து நெடுந்தீவுப் பகுதியி

பிளான் இலக்கம் 7,753. குறிச்சி—நெடுந்தீவு ெ உரித்தாளி—இல்லை.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | டிக்குரியவவின் டி ரம். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | எருவிலி | வி. சின்னகுட்டி, எம். யோசேப் சின்னத்துரை | தரிசு நிலம் | 1 3 15 |
| 2 | ஷை | எஸ். நாகலிங்கம் | ஷை | 3 0 37 |
| 3 | ஷை | பொது விற்பனவு | ஷை | 2 1 29 |

பிளான் இலக்கம் 7,755. குறிச்சி—நெடுந்தீவு நடுக்குறிச்சி. உரித்தாளி—இல்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கந்தன் கூடலுக்கு வடக்கு | கே. மரியாம்பிள்ளை (இறந்துவிட்டார்) எம். யோசேப்பும் ஐந்து பேரும் | 10 கொட்டில்களுள்ள தரிசு நிலம் | 0 3 28 |

பிளான் இலக்கம் 7,754. குறிச்சி—நெடுந்தீவு மேற்கு. உரித்தாளி—இல்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சாலமரத்தடி | கே. கந்தப்பு | 6 பனைகளுள்ள தரிசு நிலம் | 1 0 0 |
| 2 | காலாவிக்குளவெளி | வி. தொம்மன் | தரிசு நிலம் | 1 0 0 |
| 3 | ஷை | — | தரிசு நிலம் (பாதைக்காக சேமிக்கப்பட வேண்டியது) | 0 0 11* |

பிளான் இலக்கம் 7,452. குறிச்சி—நெடுந்தீவு தென்கிழக்கு. உரித்தாளி—இல்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | கந்தப்பர்பிட்டி | வேலப்பர் பெண் ராமாசி | தரிசு நிலம் | 2 3 32 |
| 2 | ஷை | — | தரிசு நிலம் (பாதைக்காக சேமிக்கப்பட வேண்டியது) | 0 1 9* |

பிளான் இலக்கம் 7,510. குறிச்சி—நெடுந்தீவு மேற்கு. உரித்தாளி—இல்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | முருக்கடிமுனை | — | தரிசு நிலம் (கடல்கரைக்காக சேமிக்கப்பட வேண்டியது) | 2 2 33* |

உரித்தாளி—வயித்தியநாதர் முருகேசுவும் மறுபேரும்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 2 | முருக்கடி | என். பொன்னம்பலம் | தரிசு நிலம் | 1 0 16 |
| 3 | ஷை | எஸ். தம்பையா | ஷை | 1 3 25 |
| 4 | ஷை | என். நாகமணி | ஷை | 1 0 7 |
| 5 | ஷை | — | ஷை (பாதைக்காக சேமிக்கப் பட வேண்டியது) | 0 1 22* |
| 6 | ஷை | வி. கந்தையா | ஷை | 2 0 4 |
| 7 | ஷை | கே. கணவதிப்பிள்ளை | இரண்டு பனைகளுள்ள தரிசு நிலம் | 1 3 29 |
| 8 | ஷை | ஏ. வயித்திலங்கம் | தரிசு நிலம் | 2 0 15 |
| 9 | ஷை | — | ஷை (பாதைக்காக சேமிக்கப் பட வேண்டியது) | 0 1 22* |
| 10 | ஷை | பொது விற்பனவு | ஷை | 1 0 29 |
| 11 | ஷை | ஷை | ஷை | 0 2 14 |
| 12 | ஷை | ஷை | ஷை | 0 2 25 |

* விற்பனவுக்கல்ல.

இக்காணிகளின் மதிப்புவிலை விற்பனவன்றே தெரிவிக்கப்படும்.

இக்காணிகளின் மறு விபரங்கள் வடமாகாண ஏசண்டரிடமிருந்தும் படங்கள் அளவு கந்தோர் தலைவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிடுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1931 ம் ஆண்டு தைமீ 10 ந் உ.

பீ. ஏச். பேர்டிலன்,
கொலோனியல் சக்கிடுத்தார்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கணங்கமுவவில் பள்ளிக்கூடம் கட்டுவதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 8,954. குறிச்சி—கணங்கமுவவும் தொரகும்புரவின் கிராமத்திலும்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பத்தேங்ககொட்டுவ அல்லது நாகாமுலகொட்டுவ | தென்னந்தோட்டம் | இயலவெல்லெலஸ்சேகெதர முதலிஆமி | 0 0 30·7 |
| 2 | நாகாமுலகொட்டுவ | சேனை | பாலவெல்லஸ்சேகெதர புஞ்சிபண்டா | 0 0 9·8 |
| 3 | ஷை | சேனை | இயலவெல்லஸ்சேகெதர ஈன்பண்டா | 0 1 20 |
| 4 | ஷை | சேனை | ஷை | 0 0 2·5 |

எடுதுக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஹூ மாசி மாசம் 10 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு மாத்தளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துக்களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1931 ம் ஹூ தைமீ 9 ந் உ.

சீ. ஈ. ஜோன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பேசாலையிலிருந்து தலைமன்னாருக்கு புதுரோட்டு போடுகிறதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,997. குறிச்சி—மைந்தர்குடியிருப்பு.

| துண்டு. | காணியினதுபெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 9 | குரம்பபானி | பனைத்தோட்டம் | பெறன்பாஸ் | 0 0 13 |
| 12 | மைந்தன்காடு | ஷை | (1) அந்தோனி சக்கராயஸ் குருசு அவருடைய பெண் ஈ. சீ. பீ. தலிமருக்காக, (2) சேகு பரிதுவின் பராமரிப்புக்காரன் ஏ. எம். எம். அபுபக்கர் சாய்பு | 0 1 2 |
| 51 | ஊறப்பன்னைக்காணி | வெண்காணி | (1) அ. உ. கபீபு முகம்மது, (2) மு. மு. செய்யது முகம்மது மரைககார், (3) என். எம். அபுல்காசீம் மரைக்கார் | 1 1 18 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் என்க்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுககு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ஹூ மாசி மாசம் 13 ந் தேதியிலன்று காலை 10 மணிககு மன்னார் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிககும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கோட்டுக்கொள்ளப்படுகின்றது.

மன்னார் கச்சேரி,
1931 ம் ஹூ தைமீ 13 ந் உ.

ஆர். எம். டேவிஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பள்ளிக்குடியிருப்பு பள்ளிக்கூடத்துக்கான என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 6,651. குறிச்சி—பள்ளிக்குடியிருப்பு.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | புளியடிவெட்டை அல்லது பள்ளி வளவு | துறந்த வெறுநிலம் .. | வெஸ்லியன் மிஷன், திருகோணமலை .. | 2 | 2 | 2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ௵ மாசி மாசம் 7 ௳ தேதியிலன்று காலை 10 மணிக்கு திரிகோணமலை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திரிகோணமலைக் கச்சேரி,
1931 ம் ௵ தைமீ 7 ௳.

டீ. ஜீ. வில்லெற்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

மட்டக்களப்பு உப்புக் குதத்திலிருந்து கல்முனை உப்புக் குதத்துக்கு 7,400 அந்தர் உப்பும், அக்கரைப்பத்துக்கு 2,000 அந்தர் உப்பும், பொத்துவிலுக்கு 600 அந்தர் உப்பும், 1931 ம் ஆண்டு மாசி மாதம் 25 ௳ திகதிக்கும் மார்கழி மாசம் 15 ௳ திகதிக்கும் இடையில் கொண்டுபோய் ஒப்புக்கொடுப்பதற்கு கேள்விக் கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2 குறித்த ஒவ்வொரு குதங்களுக்கும் ஒரு அந்தர் நிறுத்து அடுக்குஞ் செலவுசேர்ந்து என்னவீத கூலிக்கு ஏற்றக்கூடுமென்று கேள்விக்கடதாசியில் காட்டப்பட வேண்டும்.

3. கேள்விக் கடதாசியின் உறை இடப்பக்க மூலையில் "உப்பு ஏற்றக் கேள்விக் கடதாசி" என்று எழுதப்படல் வேண்டும். கேள்விக் கடதாசிகள் கிழக்கு மாகாண மட்டுக்களப்பு ஏசன்று கந்தோரில் 1931 ம் ஆண்டு தை மாசம் 30 ௳ திகதி வெள்ளிக்கிழமை பகல் பன்னிரண்டு மணிக்குப் பிந்தாமல் சேர்க்கப்பட வேண்டும்.

4. கேள்விக் கடுதாசிகள் போமில் எழுதியிருக்க வேண்டும். போம் மட்டுக்களப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். குறிக்கப்பட்ட போமில் எழுதப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. கேள்விப்போம் பெறுவதற்கு ரூபா 50 எந்தக் கச்சேரியிலாவது கட்டிப் பற்றுத்துண்டு காண்பிக்க வேண்டும். கிழக்கு மாகாண ஏசன்றரால் அல்லது சரியான தத்துவம் பெற்ற அவரின் பதிலாளால் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று எழுத்தி லறிவித்தல் பெற்ற ஏழு நாட்களுள் ஒப்பந்தம் அல்லது உறுதிமுடிக்க அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணைகொடுக்கத் தவறினால் கட்டிய பணம் ரூபா 50 அரசாட்சியாரால் பறிமுதலாக்கப்படும். அதுவுமல்லாமல் மேற்கூறியபடி செய்யத் தவறிய கேள்விக்காரன் அரசாட்சியாரின் ஒப்பந்த வேலைகளிற் தவறுசெய்தவராய்க் கவனிக்கப்பட்டு அரசாட்சி ஒப்பந்த வேலைகளில் இனிச் சேர்மானமில்லாதவராய்க் கழிக்கப்பட்டு இடாப்பில் சேர்க்கப்படக் கூடியவராயிருப்பார். ஒப்பந்தத்திற்கு கையொப்பமிட்டதன்மேல் கட்டிய ரூபா 50 திரும்பக் கொடுக்கப்படும்.

6. ஒப்பந்த வேலையை நடப்பிப்பதற்குப் பிணைகாரராய் வருவோமென்று சம்மதம் சொல்லித் தங்கள் மேல்விலாசங்கள் கொடுக்கும் இரண்டு தக்க மனிதர்களால் கையொப்பமிட்ட கடிதமொன்று ஒவ்வொரு கேள்விக் கடதாசியோடும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

7. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரன் காசு ரூபாய் 1,000 பிணைகட்ட வேண்டும். காசில்லாமல் ஆதனப் பிணையாய்க் கொடுக்கிறதாகில் தாய உறுதிகள் கொண்டுவரும் பொழுது உறுதியின் பெலப்பைப்பற்றி இராசாவின் தரணியிடமிருந்து ஒரு சேட்டுபிக்கேற்றும் ஆதனம் ஈடு ஒற்றி மற்றும் தடை பிசகில்லை என்றும் காணிப்பதிவுக் கந்தோர் றெசிஸ்திறார் இடம் ஒரு றிப்போட்டும் கொண்டுவர வேண்டும். ஆதனத்தின் பெறுமதியையிட்டு வன்னியனாரிடம் றிப்போட்டும் தேவை.

8. கிழக்கு மாகாண ஏசன்றருக்குக் கேள்வி அனுப்பும் போதே அக்கேள்வியின் கொப்பி ஒன்று கேள்விக்காரனால் தபால்மூலமாய் சங்கைபோர்ந்த வருமானப் பாதுகாவலருக்கு (Controller of Revenue) அனுப்பப்படல் வேண்டும்.

9. நியமிக்கப்பட்ட கழிவுக்குமேல் ஏதாவது குறையிருக்குமானால் ஒரு அந்தருக்கு ரூபாய் மூன்று சதம் 36 (முப்பத்தாறு) வீதம் கொந்திறாத்துக்காரன் கட்டவேண்டும்.

10. வேறு தேவையான விளம்பரங்கள் மட்டுக்களப்புக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

11. அரசாட்சியார் ஒப்பந்தக்காரரின் இடாப்பிலிருந்து கழிக்கப்பட்ட ஏதொருவருக்கும் ஒப்பந்தம் அவருடன் ஒன்றித்தும் தனித்தும் வேறு ஆட்களுடனாவது கொடுக்கப்பட மாட்டாது. அல்லது ஒப்பந்தக்காரன் அரசாட்சி ஒப்பந்தக்காரரின் அழிக்கப்பட்ட இடாப்பிலிருக்கும் ஏதொருவரையும் அல்லது கீழ்மாகாண ஏசென்றா அவர்கள் தமக்குத் தெரிந்த போதிய விஷயங்களி நிமித்தம் எழுத்தில் தடைபண்ணியவரையும் ஒப்பந்த வேலைசெய்ய நியமிக்கப்படாது.

12. மேற்கூறிய கட்டுப்பாடுகள் யாவும் சரிவர நிறைவேற்றப்பட்டிராத கேள்விகளொன்றும் கவனிக்கப்படமாட்டாது. கேள்விகளி லொன்றை அல்லது எல்லாவற்றையுங் கையேராமல் தள்ளிவிட அல்லது ஒரு கேள்வியின் எந்தப் பகுதியையாவது ஏற்க அரசாட்சியாருத் தத்துவமுண்டு.

டபிள்யு. டீ. குணரட்ன,
கீழ்மாகாண அரசாட்சி ஏசன்றுக்காக.

மட்டக்களப்புக் கச்சேரி,
1931 ம் ஆண்டு தைமீ 8 ௳ திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.